[1975 மார்ச் 21

திரு. ஆ. கு. சுப்பையா : உதவித் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சிலர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு செய்யப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கில் இருப்பதால் மீண்டும் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 435 பேர்களில் அவர்களுடைய திறன் அறிந்து அவர்களுக்கு வழிவகைகள் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. மு. சின்னசாமி : தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியில் வேலை செய்யும் நண்பர்கள் 100-க்கு 90 சதவிகிதம் கடமையைச் செய்யாமல் சர்க்கார் பணத்தை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள், ஆகவே, இந்தத் திட்டத்தைக் கைவிட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டது. எனவே, அவர்களைத் திடீரென்று நிறுத்துவதற்கு இப்போது யோசனை இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகத்தான் இளைஞர் அணி ஆரம்பிக்கப்பட்டது என்று நினைக்கிறேன். அந்த அடிப்படையில் அதிலே சேர்த்துக் கொண்டவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் ஏதாவது முன்னுரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறதா? இன்னும் பல இளைஞர்கள் படித்தவர்கள் இப்போது வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களையும் இளைஞர் அணியில் சேர்த்து, அவர்களுக்கும் முன்னுரிமை தந்து அரசாங்க உத்தியோகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவார்களா? அவர்கள் சமூதாயத்திற்கு பயன் தரத்தக்க அளவில் அவர்களுக்கு பல பணிகளைத் தந்து அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சம்பந்தப்பட்ட கேள்வி மீது ஒரு துணைக் கேள்வி போடுங்கள். பெரிய கேள்வியாகப் போடாதீர்கள். ஒரு கேள்விதான் சப்ளிமென்டரி என்ற முறையில் போடவேண்டும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அவர்களுக்கு இப்போது சம்பளம், வேலை என்ற அடிப்படையில் இல்லாது அவர்கள் பணிபுரிகிற காலங்களுக்கு உதவி ஊதியம் அளிக்கப்படுகிறது.